

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

ஞாயிறுதோறும்

| | | |
|---|---|---|
| 12.03.2026 | **உத்தம ஊழியனுக்கு ‘துன்பங்கள், பொக்கிஷங்களாய்’ மாறும்!** | 11வது வாரம் |



‘துன்மார்க்கம்’ தனக்குதானே போதித்துக் கொள்ளும் திறனுடையது! கோபம் கொண்ட ஆவியுள்ளவன் ‘எதை வேண்டுமானாலும்’ தர்க்கத்திற்கு கொண்டு வருவான்! பொறாமை கொண்டவன், குற்றம் சாட்டும் தருணத்திற்காகவே, காத்திருப்பான்! எவ்வளவு பரிசுத்தமாய் ஜீவித்தாலும், அவனையும் குற்றப்படுத்துவான்! தேவ குமாரனையும் தாக்குவான்.... எத்தனை உண்மையாய் வாழும் உத்தம தாசர்களையும் தாக்குவான்! உபவாசத்தோடு வந்த *யோவான்ஸ்நானகனைப்* பார்த்து “இவனுக்குள் பிசாசு இருக்கிறது” என தாக்கினார்கள்! புசிப்புடனும் குடிப்புடனும் வந்த கிறிஸ்துவை “பெருந்திண்டிக்காரன்” என தாக்கினார்கள்.

இவ்வாறு நன்மை அனைத்தும் தீமையாய் பரிகசிக்கப்பட்ட நேரத்தில், துன்பங்களை தன் ஆத்துமாவில் சகித்த *பவுல்* ‘இவை அனைத்தும் எனக்கு பொக்கிஷங்களாய் மாறின’ எனக் கூறிய அவரின் சாட்சியே.... “தேவனுடைய உத்தம ஊழியன்” என்ற பங்கை அவருக்கு கொண்டு வந்து கொடுத்தது!

எந்தவொரு கிறிஸ்தவ ஊழியனும், இவ்வாறு “தேவ ஊழியனாய்” அங்கீகரிக்கப் படுவதற்கு, இந்த துன்பத்தின் வழியே இன்றும் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது!

**- ரத்னம்**